**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 254/2013

Deposition Of Witness for { Prosecution PW 2 / Defense / Court

Name திரு. நடராஜன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of June 2022.

நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 2010, 2011 ஆண்டுகளில் நான் மூலைக்கரைப்பட்டி பகுதி 1 கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். 13.09.2011 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் நானும் எனது உதவியாளர் கொம்பையா அவர்களும் நான்குநேரி காவல் ஆய்வாளர் வேண்டுகோளின்படி பெருமாள்நகர் சென்று அங்கு சிவா (எ) சண்முகசுந்தரம் என்பவரை பெருமாள்நகர் பஸ்ஸ்டாண்டில் வைத்து வழக்கு சம்பந்தமாக கைது செய்தார் அப்போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 13.09.2011 ஆம் தேதி தினமலர் நாளிதழில் ராகுல் என்ற சிறுவன் காணவில்லை வந்தது அந்த விளம்பரத்தை வைத்து கொண்டு மேற்படி விளம்பரத்தில் 4 செல்போன் நம்பரை தொடர்பு கொண்டு பணம் வேண்டும் என்று கேட்டதாகவும் தெரிவித்தார். பிறகு சிவா என்பவர் சட்டை பாக்கெட்டில் இருந்து 2 சிம் கார்டுகளும் போலிசார் எடுத்தார்கள். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்). மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கொம்பையா என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும். மேற்படி அத்தாடசியில் நானும் கொம்பையா என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும். மேற்படி அ.சா.ஆ.3 மற்றும் 4 ல் 2வது கையெழுத்து செய்த கொம்பையா உடையது அவர் தற்போது இறந்துவிட்டார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை